செ.கு.எண்: 77.

30–4–2007

# தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் மே தின வாழ்த்துச் செய்தி

மே நாள்! மேதினி எங்கும் உழைப்பாளர் பெருமையை உரைத்திடும் திருநாள்! இந்நன்னாளில் தொழிலாளர் சமுதாயத் தோழர்களுக்கு என் இதயம் கனிந்த இனிய மேதின நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

"திராவிட இனமே பாட்டாளி இனம்" என்றார் பேரறிஞர் அண்ணா. அவரது கொள்கை வழிநின்று தொண்டாற்றிடும் இந்த அரசு தமிழகத்தில் வாழும் தொழிலாளர்களின் நலன்களைக் காத்திடும் பல்வேறு பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

1969–க்குப் பின், திமுக அரசு காலத்தில், தொழிலாளர் நலனுக்குத் தனி அமைச்சகம், மே தினத்திற்கு அரசு விடுமுறை; தொழிலாளர் நல வாரியம், ஒப்பந்தத் தொழிலாளர் நலனுக்குத் தனிச் சட்டம்; விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெற குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டம்; விபத்தால் பாதிக்கப்படும் தொழிலாளர்கள் பயன்பெற தொழில்–விபத்து நிவாரண நிதி; தொழிலாளர் கல்வி நிலையம் போன்றவைகள் ஏற்படுத்தப்பட்டன; சென்னை நேப்பியர் பூங்காவிற்கு, மே தினப் பூங்கா எனப் பெயர் சூட்டி, அங்கு, மே தின நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது; அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம், விவசாயத் தொழிலாளர் நல வாரியம் ஆகியவற்றுடன் குறிப்பிட்ட சிலவகைத் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்காகத் தனித்தனி தொழிலாளர் நல வாரியங்களும் உருவாக்கப்பட்டன.

2006 இல் திமுக அரசு அமைந்தபின், முந்தைய அதிமுக அரசினால் கலைக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தினை மீண்டும் ஏற்படுத்தி, "தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம்" தொடர்ந்து பயனளிக்கத் தக்கவகையில் தனிச் சட்டம் இயற்றி, விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்குக் கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவி, ஒய்வூதியம், ஈமச் சடங்கு உதவி, விபத்துக் கால இழப்பீட்டு உதவி என்பன போன்ற பல உதவிகள் அளிக்கப்படுகின்றன;

தொழில்வாரியாகக் கழக அரசு உருவாக்கி, முந்தைய அதிமுக அரசினால் கலைக்கப்பட்டும், முடக்கப்பட்டும் செயலிழந்துபோன தனித்தனி தொழிலாளர் நல வாரியங்களைத் தற்போது மீண்டும் உருவாக்கி வருவதன்மூலம் பாட்டாளிகளாகச் சமுதாயத்தில் நலிந்த நிலையில் வாழும் ஏழை எளியவர்களின் வாழ்க்கை மேம்பட வழிவகுக்கப்படுகிறது; தொழிலாளர்களுக்குத் தடையின்றித் தாராளமாக போனஸ், ஊக்கத் தொகை; நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம்; விவசாயக் கூலிகளாகவும், வேறுபல தொழில்களில் உழைப்பாளிகளாகவும் திகழும் ஏழை எளிய கர்ப்பிணிப் பெண்களுக்கு 6000 ரூபாய் நிதியுதவி; உழைப்பாளி வர்க்கம் ஒய்வு நேரங்களில் உளம் களிக்க இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்; தொழிலாளர் குடும்பங்களின் பசிப்பிணி போக்கிட 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி; எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் எனப் பல்வேறு உதவிகளை இந்த அரசு வழங்கி, நாளும் உழைத்திடும் ஏழை எளிய தொழிலாளர் குடும்பங்கள் நலம் பெற வேண்டும் – வளம் பெற வேண்டும் எனத் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதனை இந்த மே தினத் திருநாளையொட்டிச் சுட்டிக்காட்டி, தொழிலாளர் சமுதாய உடன்பிறப்புகளுக்கு மீண்டும் எனது மே தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

வாழ்க மே தினம்! வெல்க தொழிலாளர் சமுதாயம்!

****

வெளியீடு: இயக்குநர், செ.ம.தொ.துறை, சென்னை–9.